எனது காரைக்குடி தொகுதி மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக எனது மானமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரைக்குடி நகரப் பகுதி, பெரிய வளர்ந்த பகுதி. அப்பகுதியில் சுற்றுவட்டப் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். பழைய பேருந்து நிலையத்தில் தொடங்கி, கழனிவாசல் பத்திரப் பதிவு அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சட்டக் கல்லூரி, மாவட்ட தலைமை மருத்துவமனை, Water Tank, *வருமான வரி அலுவலகம், புதிய பேருந்து நிலையம், பெரியார் சிலை, கள்ளுக்கட்டி வரை சென்று, மீண்டும் பழைய பேருந்து நிலையத்தை அடையக்கூடிய அளவில் பேருந்து வழித்தடம் தர வேண்டும். அதேபோன்று, பழைய பேருந்து நிலையம், கழனிவாசல்,* Water Tank, *பாரி நகர், அழகப்பா பொறியியல் கல்லூரி, அழகப்பா பல்கலைக்கழகம், கல்லூரிகள், இரயில்வே நிலையம் வரையிலான வழித்தடத்தில் சுற்று வட்டப் பேருந்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அதிக அளவிலான பேருந்து வழித்தடங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதற்காக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவற்றையெல்லாம் எழுதிக்கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. மாங்குடி அவர்கள் காரைக்குடியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டட திறப்பு விழாவிற்கு நாங்கள் சென்றிருந்தபோது, மாவட்ட அமைச்சர் அண்ணன், திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களுடன் சேர்ந்து சுற்று வட்டப் பாதையில் பேருந்து தேவை குறித்து கூறியிருந்தார்கள். ஏற்கெனவே காரைக்குடி இரயில்வே நிலையத்திற்கு பேருந்து இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளையும் எழுத்துப்பூர்வமாக அளித்தால் அதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு.* N. *அசோக்குமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

குடமுழுக்கு

***10091—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் அருள்மிகு புராதனவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற புராதனவனேஸ்வரர் திருக்கோயில் என்பது 23 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்ற ஒரு திருக்கோயிலாகும். தற்போது மண்டலக் குழு, மாநிலக் குழு, தொல்லியல் குழு ஆகியவற்றின் அனுமதி பெற்று, சுமார் 83.00 இலட்சம் ரூபாய் செலவில் ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி 27-6-2024 அன்று, அதாவது இன்றைக்கு திறக்கப்படுகின்றது. இன்னும் 15 நாட்களுக்குள் திருக்கோயிலுக்கான திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்தியாவின் No.1 தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, எங்களின் எதிர்காலம் மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதியிலுள்ள அருள்மிகு புராதனவனேஸ்வரர் பெரியநாயகி அம்மன் திருக்கோயில், ‘திருச்சிற்றம்பலம் சிவனுக்கு காசியைவிட வீசம் அதிகம்; வழிபடுவோருக்கு பலன்கள்கூட, என பாண்டிய மன்னனிடம் சிவபெருமான் தோன்றி சொன்னதாக வரலாறு உண்டு. இந்தத் திருக்கோயிலில் திருமணத் தடை நீக்கம் மற்றும் குழந்தை பாக்கியம் வேண்டி ஏராளமான மக்கள் வருகைபுரிகிறார்கள். எனவே, திருப்பணிக்கு நீங்கள் மிகச் சிறப்பான ஒரு தொகையாக ரூ.83.00 இலட்சம் வழங்கியதற்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அங்கு ஒரு திருமண மண்டபம் கட்டித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபங்களைப் பொறுத்தளவில் பக்தர்களின் பயன்பாடு, திருமணத்திற்கு ஏற்ற ஸ்தலங்களாக இருக்கின்ற இடங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இதுவரையில், சுமார் ரூ.350 கோடி மதிப்பீட்டில், 97 திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிச்சயம் திருமண மண்டபம் வேண்டுமென்றால், சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபம் வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேராவூரணி தொகுதி, பெரமலூர் பேரூராட்சியிலுள்ள ஸ்ரீபால சுப்ரமணியன் திருக்கோயில் சிதிலமடைந்துள்ளது. எனவே, அந்தத் திருக்கோயிலைப்

2024 ஜூன் 27]

புனரமைத்து, கும்பாபிஷேகம் நடத்திடவும், திருவோணம் ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை சென்னியம்மன் திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்திடவும், திருமண மண்டபம் அளித்திடவும், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் அருள்மிகு கதலிவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருமண மண்டமும், கொடி மரமும் வழங்கிடவும், ஆத்தாளூர் வீரமாகாளியம்மன் திருக்கோயிலுக்கு பேராவூரணி சேதுரோட்டில் திருமண மண்டபம் வழங்கிடவும், பேராவூரணி ஒன்றியத்தில் சிதிலமடைந்துள்ள குறிச்சி சிவன் கோயிலைப் புனரமைத்து குடமுழுக்குச் செய்திடவும் வேண்டுகிறேன். நிச்சயமாக இவற்றையெல்லாம் நீங்கள் எங்களுக்கு செய்து தர வேண்டும் என வேண்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோரிய ஸ்ரீபாலசுப்ரமணியன் திருக்கோயில், வீரமாகாளியம்மன் திருக்கோயில், சென்னியம்மன் திருக்கோயில், கதலிவனேஸ்வரர் திருக்கோயில், குறிச்சி சிவன் கோயில் ஆகிய 5 திருக்கோயில்களுக்கும் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். அவர் கோரியபடி குடமுழுக்கு, திருமண மண்டபங்கள் போன்றவற்றிற்கு, எவ்வளவு விரைவாகப் பணிகளை நிறைவேற்ற இயலுமோ அந்த அளவில் விரைவுபடுத்தப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் செப்டம்பர் மாத இறுதிக்குள் 1,900 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட இருக்கின்றன என்ற தகவலை அவையிலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் கோரிய திருக்கோயில்களின் குடமுழுக்கும், வெகுவிரைவில் நடத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*